අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. **ED/05/67/28/ 06/ (VII – I)**

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date **2026.10.14**

அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள் / அதிபர்கள் /
பீடாதிபதிகள் / ஆசிரியர் கலாசாலை அதிபர்கள் /
ஆசிரியர் நிலைய முகாமையாளர்களுக்கும்

<u>ஆரம்ப தொழில்நுட்பமல்லாத ஊழியர் வகுதி மற்றும் ஆரம்ப அரை தொழில்நுட்ப ஊழியர் வகுதியினருக்கான வினைத்திறன்காண் தடைத்தாண்டல் 2025 (I) இற்கான விண்ணப்பங்களைக் கோருதல்</u>

ஆரம்ப தொழில்நுட்பமல்லாத ஊழியர் வகுதி (PL1), ஆரம்ப அரைத் தொழில்நுட்ப ஊழியர் வகுதி (PL2) ஆகியவற்றின் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் 2025 (I) பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்கமைய, இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ இலக்கம் 02 இன் படி வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

02. அதற்குரிய பாடத்திட்டங்கள் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமையும். கடந்த ஆண்டுகளில் மற்றும் இவ்வருடத்தில் இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சைகளில் சித்தியடையாத மற்றும் அச்சந்தர்ப்பங்களில் தோற்ற முடியாமற்போன ஊழியர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும். மேலும், தர உயர்வு பெற்ற ஊழியர்கள் தாம் பதவி உயர்வு பெற்றுள்ள தரத்திற்குரிய தடைத்தாண்டலிற்கும் தோற்றுவதற்கு விண்ணப்பிக்க முடிவதுடன், புதிய நியமனம் பெற்றவர்களும் ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். இதனுடன் உள்ள இணைப்பு 2 இல் அடங்கியுள்ள படிவத்திற்கு அமைவாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2026.11.15 ஆம் திகதிக்கு முன்னர் எனக்குப் பதிவுத் தபாலில் கிடைக்குமாறு செய்யுமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

03. விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படும் கடித உறை பின்வரும் படிவத்தின் படி அமைதல் வேண்டும் என்பதையும் தயவுடன் கவனத்தில் கொள்ளவும்.

ஆரம்ப தொழில்நுட்பமல்லாத ஊழியர் வகுதி மற்றும் ஆரம்ப அரை தொழில்நுட்ப ஊழியர் வகுதிக்கான வினைத்திறன்காண் தடைத்தாண்டல் 2025(I)

சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
(இணைந்த சேவையல்லாத)
கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்லை.

04. கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, திறன் தடைத் தேர்வை *(Efficiency Bar Examination)* பூர்த்தி செய்த பதவியாளர்கள், அத்தேர்வுக்கு விண்ணப்பிக்கத் தேவையில்லை என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்

- I ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டலில் சித்தியடைந்த தரம் III இல் பதவி வகிப்பவர்கள்
- II ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டலில் சித்தியடைந்த தரம் II இல் பதவி வகிப்பவர்கள்
- III ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டலில் சித்தியடைந்த தரம் I இல் பதவி வகிப்பவர்கள்

05. ஆய்வுகூடட உதவியாளர் மற்றும் நூலக உதவியாளர் நியமனங்களைப் பெற்ற உத்தியோகத்தர்கள் தமது தற்போதைய தரத்திற்குரிய ஏதேனுமொரு வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்திருப்பின், மீண்டும் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

ஆர். பீ. கங்கேவல
மேலதிக செயலாளர் (கல்விசாரா மற்றும் இணைந்த சேவைகள்)
செயலாளருக்காக